<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு</u>

**COS**.6/2022

பெயர்- ஹேமநாதன் தேதி:17.11.2022

வா.சா.1 ஆஜர். சத்தியப் பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

எனக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட 11.10.2011 ம் தேதியிட்ட ஒப்பந்தம்தான் வா.சா.ஆ.3 என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணத்தில் ஒப்பந்த காலம் 09.10.2012 வரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பெங்களூரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் இல்லை, ஈரோட்டில் ஏற்படுத்தப்பட்டது. ஆதார் அட்டை எடுப்பது சம்மந்தமான வேலையை நான் எங்கு எங்கு செய்தேன் என்றால் ஈரோடு மாவட்டம் முழுவதும் செய்தோம், அதன் தொடர்ச்சியாக கர்நாடகா மாநிலத்தில் உள்ள பெல்லாரி மாவட்டத்திலும் செய்தோம். ஈரோடு மாவட்டத்தில் மேற்படி வேலையை எவ்வளவு நாட்கள் செய்தோம் என்றால் தற்சமயம் நினைவில் இல்லை. மேற்படி வா.சா.ஆ.3 ஒப்பந்தத்தில் ஈரோட்டில் வேலை செய்வது குறித்து குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஈரோட்டில் எந்த வருடம் மேற்படி வேலையை ஆரம்பித்தோம் என்றால் 2011 க்கு பின்னிட்டு ஆரம்பித்தோம். இதுவரை எத்தனை பேர்களுக்கு நாங்கள் ஆதார் அட்டை பதிவுகளை செய்துள்ளோம் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளேனா என்றால் சமர்பித்துள்ளேன். அவ்வாறு நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையில் 2099 பதிவுகள் குறைபாடானவை என்று அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களது பணியில் ஏற்பட்ட மேற்படி குறைப்பாட்டின் காரணமாக ஒரு குறைபாட்டிற்கு 500 என்ற வீதம் 2099 குறைபாடுகளுக்கு ரூ.10,49,500/- அரசாங்கத்தால் பிரதிவாதிகளுக்கு கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல, நாங்கள் செய்த வேலைக்கு உரிய தொகையை தருவதாகதான் நாளது தேதிவரை மெயில் அனுப்பப்பட்டது. நாங்கள் செய்த

வேலைகளுக்கான பில்கள் மற்றும் இன்வாய்ஸ்கள் பிரதிவாதிகள் வசம் எங்களால் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் செய்த வேலைக்களுக்கான அனைத்து ஆவணங்களையும் முறையாக ஒப்படைத்துள்ளோம். அந்த ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனம் விதித்த தெண்ட தீர்வை ரூ.2,76,319/- என்பது எந்த மாதம் வரை என்றால் குறிப்பிட்டு இல்லை, மொத்தமாகதான் சொல்லியுள்ளார்கள், அதற்கான ஆவணங்கள் உள்ளனவா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள பதிவுகள் விவரம் மற்றும் அதற்குண்டான தொகை ஆகியவற்றை பொறுத்து ஆவணங்கள் உள்ளனவா என்றால் அவ்வப்போது செய்யப்படும் பதிவுகள் குறித்த கணக்குகளை உடனுக்குடன் அனுப்பிவிடுவோம், மொத்தமாக பதிவுகள், கணக்கு வழக்குகள் இல்லை.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)